MAY 2025

U/ID 33226/ UCT6B/UCL6B

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை எழுதுக.

1. இளங்கோவடிகள் குறிப்பு வரைக.

2. மணிமேகலை முதற்சமயக் காப்பியம் என்பதற்குரிய சான்றுகள் யாவை?

3. சுரமஞ்சரி யார்?

4. சீவகசிந்தாமணி குறித்து எழுதுக.

5. பெரியபுராணம் நூற்குறிப்பு தருக.

6. நாயன்மார்கள் யாவர்?

7. உருக்காட்டுப்படலவிளக்கம் தருக.

8. வீட்டுமப்பருவச்சிறப்பு யாது?

9. வீமன் குறிப்பு தருக.

10. தேம்பாவணியின் சிறப்பு யாது?

11. சீறாப்புராணம் நூல் அமைப்பை விளக்குக.

12. இதிகாச காப்பியங்கள் எவை? ஏன்?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை எழுதுக.

13. கோவலன் கண்ணகி திருமண நிகழ்வை எழுதுக.

14. மாதவியின் முற்பிறப்பு வரலாற்றை எழுதுக.

15. சீவகனின் செயல்களாக சுரமஞ்சரியார் இலம்பகம் மொழிவன யாவை?

16. மெய்ப்பொருள் நாயனாரின் சிவத்தொண்டை விவரிக்க.

17. இராமனது நிலையை எண்ணிய சீதையின் மனநிலையை விளக்குக.

18. கண்ணன் அருச்சுனன் உரையாடல் தன்மையை எழுதுக.

19. கோலியாத்தின் அறைகூவலை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் 500 சொற்களில் விடை எழுதுக.

20. அறவணர் தொழுத காதை உரைக்கும் செய்திகள் யாவை?

21. சீவகன் சுரமஞ்சரியை மணந்த நிகழ்வைப் புலப்படுத்துக.

22. அனுமன் சீதை உரையாடல் வழிபெறப்பட்ட செய்திகள் யாவை?

23. முதற்போர்ச் சுருக்க நிகழ்வுகளைத் தொகுத்துரைக்க.

24. மானுக்குப் பிணைநின்ற நபிகள் நாயகத்தின் தியாகத்தை எழுதுக.

———————